சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
ஆவணி 29
நம்மான் பிறை 29
புதன் (14-9-77)
நிருவியது 1947
புத்தகம் 31
இதழ் 28

விலை சதம் 35


# தனிநாடு கொள்கையிலிருந்து இம்மியும் விலகமாட்டேன்!

## பொய்ப்பிரசாரங்களுக்கு பட்டிருப்பு பா. உ. ஆப்பு!

"தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் 'தமிழ் ஈழம்' என்ற கொள்கையிலிருந்தோ— தமிழர் விடுதலைக் கூட்டணியிலிருந்தோ நான் என்றைக்கும் விலகமாட்டேன்; தமிழ் ஈழத்துக்காகப் போராடும்படிதான் பட்டிருப்புத் தொகுதி மக்கள் எனக்குப் பணித்திருக்கிருர்கள். பட்டிருப்புத் தொகுதி மக்கள் தந்த கட்டளையை விட்டு நான் ஒருபோதும் ஓடவோ ஒதுங்கவோ போவதில்லை; நான் தனிநாடு கொள்கையிலிருந்து விலகிச் செல்லப் போவதாகவும், தனிநாடு கோரிக்கையை எதிர்த்துப் போராடப் போவதாகவும் அண்மையில் சிங்கள முதலாளிகள் நடத்தும் ஆங்கில, தமிழ் நாளேடுகளிலும், சிங்கள அரசின் வானொலியிலும் செய்யப்பட்ட திட்டமிட்ட பொய்ப் பிரசாரத்தைக் கண்டு தமிழ் மக்கள் குழப்பமடையவேண்டியதில்லை — நான் சார்ந்துள்ள இயக்கத்துக்கும், இயக்கம் ஏற்றுள்ள இலட்சியத்துக்கும், என்னைத் தெரிவு செய்த தமிழ் மக்களுக்கும் நான் என்றும் துரோகம் செய்யவோ நினைக்கவோ மாட்டேன்.''.

இவ்வாறு பட்டிருப்பு பா.உ திரு. பூ. கணேசலிங்கம் சுதந்திரன் வாயிலாக தமிழ் மக்களுக்குத் தெரிவிக்கிருர். அவர் மேலும் கூறியதாவது:-

''அண்மையில் ஏற்பட்ட இனக்கலவரத்திளுல் தமிழ்மக்கள் உள்ளம் நொந்து போயிருக்கின்ற இன்றைய நிலையில், யாரையாவது பிடித்து தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு எதிராக எதையாவது உளற வைத்து, அதைப் பத்திரிகைகளில் பெரிதாக பிரசுரித்து தமிழ் மக்களை குழப்பிவிட சிங்கள அரசும், அதற்குத் தாளம் போடும் நாளேடுகளும் முயற்சித்து வருவது தெரிந்ததே. இதே போலத் தான், என்னுடைய பேச்சையும் வேண்டுமென்றே பத்திரிகைகளும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனமும் தமக்குச் சார்பாகத் திரித்து பிரசாரம் செய்திருக்கின்றன. தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ் மக்களும் ஏற்றுக்கொண்டிருக்கும் 'தனிநாடு' கொள்கையை கைவிடப் போவதாகவோ, அல்லது தனிநாடு கோரிக்கையை எதிர்த்து முன்னணியில் நின்று போராடப்போவதாகவோ, நான் எச்சந்தர்ப்பத்திலும் கூறவேயில்லை. தனிநாடு கொள்கையை முன் வைத்தே நான் மக்களிடம் வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றேன். அக்கொள்கையை கைவிட நான் விரும்பினுலும் எனக்கு அதற்கு அதிகாரம் இல்லை.''

இவ்வாறு திரு. கணேசலிங்கம் தெரிவித்தார்.

### பசறையில் சுதந்திரன் முகவர் கடைக்கு 'தீ!'

2-9-77 பத்து மணியளவில் பசறை சுதந்திரன் ஏஜண்டின் கடைக்கு தீ வைக்கப்பட்டது. தீ பரவாமல் தமிழ் மக்கள் அணைத்து விட்டார்கள். சில யார் தூரத்தில் இருக்கும் பசறை போலீஸ் நிலையத்திலிருந்து உடனடியாக உதவி கிடைக்க வில்லை. கூட்டணி சார்புடைய மலையக தமிழ் இளைஞர் பேரவையைச்சேர்ந்த சில இளைஞர்களுக்கு பயமுறுத்தல் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

### தந்தை செல்வாவின் சக்தி!

தமிழ் ஈழத் தலைநகராம் திருகோணமலையில் 23-8-77ல் இனக்கலவரம் தலைவிரித்தாடிய சமயம். அப்போது ''பஸ்'' நிலையத்துக்கு முன்னல் இருந்த பிள்ளையார் ''ஸ்ரோர்ஸ்'' என்னும் பலசரக்கு கடையும் 'கோணேஸ்வரா கபே' என்னும் தேநீர்க் கடையும் தீக்கிரையாக்கப்பட்டது. தரை மட்ட மாக்கப்பட்ட அக்கடையினுள் இருந்த எமது தந்தை செல்வாவின் அழகிய உருவப் படம் மட்டும் எரியாது அப்படியே எம்மைப் பார்த்த வண்ணம் காட்சியளித்துக்கொண்டிருந்தது.

அது மட்டுமல்ல— அண்ணல் செல்வாவின் நினைவுச் சின்னமாக சிவன் கோவிலடியில் எழுப்பப் பெற்ற கோபுரத்தை சிங்கள வெறியர்கள் இரு முறை வெடி குண்டு வைத்து தகர்க்க முற்பட்டனர். இரு முறையும் குண்டு வெடிக்காது போகவே திரும்பி விட்டனர்: தந்தையின் ஆபூர்வ ஆத்ம சக்தியின் மகிமைதான் என்னே! (தகவல்: தர்மகுலராசா)

# பொத்துவிலில் கூட்டணி வெற்றி! 'தனிநாடு' கொள்கைக்கு ஆதரவு

தமிழ் ஈழத்தின் கீழைத் தென்கோடியில்—தமிழ் ஈழத்தின் நுழை வாயிலாக விளங்கும் பொத்துவில் தொகுதியில் தமிழர் விடுதலைக் கூட்டணிசார்பில் போட்டியிட்ட திரு. எம். கனகரத்தினம் அவர்கள் 23, 690 வாக்குகளினுல் வெற்றியீட்டியுள்ளார். —திரு. கனகரத்தினத்துக்கு இவ் வெற்றியையீட்டிக் கொடுத்ததன் மூலம் அம்பாறை மாவட்டத் தமிழ் மக்களும் தமிழர்விடுதலைக் கூட்டணியின் 'தனிநாடு' கொள்கைக்கு தமது ஒப்புதலை அளித்துள்ளனர்.

12-9-77ல் நடைபெற்ற இரட்டை அங்கத்தவர் தொகுதியான பொத்துவில் தொகுதி இடைத்தேர்தல் முடிவுகள் 13-9-77 அதிகாலை வெளியிடப்பட்டன. தேர்தல் முடிவுகள் வருமாறு:—

* டாக்டர் ஏ.எம். ஜலால்டீன் (ஐ. தே. க.) — 30, 315
* எம் கனகரத்தினம் (த. வி. கூ.) — 23, 990

எம். எம். முஸ்தபா (சி. ல. சு.) — 22, 378
ந. தர்மலிங்கம் (சுயே.) — 7,644
எஸ். எஸ். அப்துல்சத்தார் — 272
செய்யது முகமது — 2902
பி. எம். எஸ். ஜனநாயக்கா — 1458

யூ. என். பி. கட்சியைச் சேர்ந்த ஏ. எம். ஜலால்டீன் முதலாவது பிரதிநிதியாகவும், கூட்டணியைச் சேர்ந்த திரு. எம். கனகரத்தினம் இரண்டாவது பிரதிநிதியாகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இரட்டைத் தொகுதியாகிய பொத்துவில் தொகுதியில், தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் திரு. எம். கனகரத்தினம் மட்டுமே போட்டியிட்டார்.

கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின்

(4ம் பக்கம் பார்க்க)

### சிங்களவருக்கு உடன் வசதி ஆனல் தமிழருக்கு ? ! !

தமிழ் ஈழத்தில் எந்தவித இழப்பும் பாதிப்புமின்றி பூரணமான இராணுவ, பொலீஸ் பாதுகாப்புடன் சுகமாக இருக்கும் சிங்களவர்களுக்கு பின் வரும் சலுகைகளை அரசு வழங்கியிருக்கிறது— அதாவது—

(1) சிங்கள ஆசிரியர்கள் ஒவ்வொருவருக்கும் வட்டியில்லாமல் ரூபா 1500 கடன்வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் செப்டம்பர் 30 வரை கடமை லீவுடன் முழுச்சம்பளம் வழங்கப்படுகிறது.

(2) காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் வேலை செய்து வந்த சிங்கள

(4ம் பக்கம் பார்க்க)

தமிழ் ஈழத்தேசியத்தின் விடுதலைக் குரல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ் மக்களுக்கு நீட்டப்படுவது பிரதமரின் நட்புக்கரமல்ல - பொலீசாரின் முஷ்டிக்கரங்களே!"



பொலீஸ்காரர்கள் எங்களை சுடுவதற்காக துப்பாக்கியும் கையுமாக வந்த நேரத்தில், நாம் காரை நிறுத்தி அதை சற்றுப் பின்னுக்கு எடுக்க நேரிட்டது. அப்போது எங்களைக் கண்ட நிலையப் பொறுப்பதிகாரி (H. Q. I) நாங்கள் யார் என்பதை அந்தப் பொலீஸ்காரர்களுக்கு கூறி, அவர்கள் எங்களைச் சுடுவதிலிருந்தும் தடுத்து நிறுத்தினர். இல்லாவிடின் நாங்களும் துப்பாக்கிச் சூட்டுக்கு அகப்பட்டிருப்போம். அதிர்ஷ்டவசமாக நாங்கள் உயிர் தப்பினேம். எப்படியோ நாம் அங்கு போய்ச் சேர்ந்தோம் — நான் அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கவேண்டுமென்று கூறினேன். உதவி பொலீஸ் அதிபர் என்னுடன் வந்தார்.

இப்போது ஓர் உண்மையை பிரதமரின் கவனத்துக்கு சுட்டிக் காட்ட விரும்புகிறேன் — பொலீஸ்காரர்கள் அங்கு சீருடையில் காணப்பட்டாலும்—அவர்களிடம் அவர்களுக்குரிய பொலீஸ் இலக்கங்கள் காணப்படவில்லை. அங்கு • உதவி பொலீஸ் அதிபரும், நிலையப் பொறுப்பதிகாரியும் நின்றபோதிலும்—அவர்கள் தமது ஆட்களை இலக்கங்கள் பொறிக்கப்படாத சீருடையுடன் அங்கு கடமை செய்ய அனுமதித்திருக்கிருர்கள்.

கொன்றிருக்கிறீர்கள்! இந்த அராஜகத்தை உங்கள் ஆட்கள் தொடர்ந்து நடத்த வேண்டுமென்றும் விரும்புகிறீர்கள்! உம்மைப் போன்றவர்கள் சந்திக்கு கொண்டுவரப் படவேண்டும். நான் பாராளுமன்றத்தில் இதைக் கூறுவேன்'' என்று கூறினேன்.

### தாக்கப்பட்டேன்

நான் இதைச் சொல்லி வாய் மூடுவதற்கு முன், எனக்கு பின்னுலிருந்த சில

அவர்கள் நான்கு முறை சுட்டனர். அங்கு என்னுடனிருந்த இரண்டு பொலீஸ் உயர்தர அதிகாரிகளும் என்னை விட்டு விட்டு, பொலீஸ்கான்ஸ்டபிள்களிடம் ஓடோடிச் சென்று "சுடாதீர்கள்; சுடாதீர்கள்" என்றுகெஞ்சியவண்ணம் அவர்களைச் சுற்றிச் சுற்றியோட வேண்டியிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இந்த முறையில்தான் பொலீசார் நடந்து கொள்கின்றனர். இப்

> யாழ் பொலீஸ் அட்டூழியங்கள் குறித்து தேசிய அரசுப் பேரவையில் 18-8-77ல் ஒத்திவைப்புப்பிரேரணை மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் விரிவாக எடுத்து விளக்கியிருந்தார். அவரது பேச்சின் முதலாவது பகுதி 11-9-77 சுதந்திரனில் இடம்பெற்றிருந்தது — இறுதிப்பகுதி இங்கு இடம் பெறுகிறது.
>
> — ஆர்

ராகிவிட்டன. புதிய சந்தையின் ஒரு பகுதிகூட எரிக்கப்பட்டுவிட்டது. பழைய சந்தையை அடுத்திருந்த தையற் கடைகளும், துணிக் கடைகளும் தூள் தூளாக்கப்பட்டுள்ளன. தீ எப்படி பிடித்தது? நாம் அதுபற்றியும் ஆராய்ந்துள்ளோம்.

தெருவில் பொதுமக்கள் கொளுத்திப் போட்டிருந்த டயர்களை தூக்கி பொலீஸ்காரர்களில் சிலர் பழைய சந்தைக்குள்ளிருந்த கடைகளுக்குள் வீசிவிட்டார்கள்; இப்படித்தான் தீ பிடிக்க ஆரம்பித்தது. எரிந்து கெண்டிருந்த டயர்களைத் தூக்கி கடைக்குள் பொலீசார் வீசியதை நேராகப் பார்த்தவர்கள் இருக்கிருர்கள். இதை நேரம்வரும் போது சாட்சிபூர்வமாகநிருபிப்பதற்கு நாம் தயாராக இருக்கிறேம். ஆனல் பொலீசார் இப்போது வேறு விதமாக கதையளக்க ஆரம்பித்திருக்கிருர்கள். அதாவது, பொது மக்களே தங்கள் சொந்தக் கடைகளுக்கும். தங்கள் சொந்த சந்தைக்கும். தீ மூட்டியதாக பொலீசார் புரளியளக்கிருர்கள்.

இதன் பின்னர் பொலீசார் ஓடி ஓடி பொதுமக்களை சுட ஆரம்பித்தார்கள். இதில் நான்கு

பதிவாளர் தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டார். எங்களது ஆலோசனைப் படியே வெளியார் யாரும் வளாகத்துக்குள் நுழைய முடியாதபடி இராணுவக் காவல் போடப்பட்டிருந்தது. ஆனல் அங்கு பயிலும் தமிழ் மாணவர்களோ- ''எங்கள் சிங்கள நண்பர்களை பாதுகாக்க நாம்இருக்கிறேம்; எதற்காக இங்கு இராணுவம் வரவேண்டும்?'' என்று கேட்டிருக்கிருர்கள். இது பற்றியே அங்கு பிரச்சினையொன்று எழுந்திருந்தது. இதைத் தீர்ப்பதற்காக மானிப்பாய் பா. உ. தர்மலிங்கம், உடுப்பிட்டி இராசலிங்கம், பருத்தித்துறை துரைரத்தினம் அங்கு அமைதி

# தேசிய அரசபேரவையில் எதிர்க்கட்சித் தலைவர்!

நாங்கள் அந்த இடங்களைச் சுற்றிப் பார்க்க முயற்சித்தபோது — பொலீஸ்காரர்கள் எம்மிடம் வந்து குண்டுகள் அங்கும் இங்கும் வீசப்படுவதாக கூறினுர்கள். பொலீஸ்காரரை நோக்கி குண்டுகள் வீசப்படுவதாக பொலீஸ் உதவி அதிபரும் என்னிடம் கூறினுர். நீங்கள் குண்டு வீசப்படுவதைக் கண்டீர்களா? அல்லது குண்டு வெடித்த ஒரு இடத்தையாவது காட்டுவீர்களா என்று உதவி பொலிஸ் அதிபரிடம் கேட்டேன். அதற்கு அவர், தாம்எதையும்காணவில்லையென்றும், நிலையப் பொறுப்பதிகாரியே இதைத் தம்மிடம் கூறியதாகவும் தெரிவித்தார். அதற்குப் பிறகு நிலையப் பொறுப்பதிகாரியை நான் அழைத்து—எங்காவது குண்டு வீசப்பட்டதை நீங்கள் கண்டீர்களா? என்று கேட்டேன். குண்டு வீசப்பட்டதை தாம் காணவில்லையென்று அவரும் பதிலளித்தார். அப்படியானுல் குண்டுகள் வீசப்படுவதாக உதவி பொலிஸ் அதிபரிடம் ஏன் கூறினீர்கள் என்று கேட்டேன். தாம் அப்படி உதவி பொலீஸ் அதிபரிடம் கூறவில்லையென்று அவர் மறுத்தார். நான் உடனடியாக உதவி பொலீஸ் அதிபரின் பக்கம் திரும்பி— ''இத்தகைய பொய்யின் அடிப்படையில் தான் நீங்கள் இரண்டு பேரைச் சுட்டுக்

போலீஸ்காரர்கள், என்னைத் தாக்கத் தொடங்கினுர்கள். ஒரு பொலீஸ்காரன் துவக்குப் பிடியால் எனக்கு அடித்தான்—இன்னெருவன் கைகளால் அடித்தான். அங்கு நின்ற உதவி பொலீஸ் அதிபரும். நிலையப் பொறுப்பதிகாரியும், தமது ஆட்கள் என்னை தாக்காமலிருப்பதற்கு முயற்சி செய்தார்கள்.

பொலீஸ் படை ஒரு கட்டுப்பாடான படை என்று கருதப்படுகிறது. ஆனல் இது ஒரு கிராமச் சண்டையையே எனக்கு நினைவூட்டியது. ஒருவன் அடிக்கப்போக, மற்றவன் அவனைப் பிடிப்பது போன்ற தன்மையே அங்கு பொலீசார் மத்தியில் காணப்பட்டது.

இச்சமயத்தில் அங்கு நடந்த மேற்படி நிகழ்ச்சிகளையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த பொதுமக்கள் கொதிப்படைந்தனர் — பொறுமையிழந்தனர்; அவர்கள் சத்தமிடத் தொடங்கினுர்கள். அவர்கள் முன்னேறி எங்களை நோக்கி வருவதைத் தடுக்கும் நோக்குடன் திரு. யோகேஸ்வரன் அவர்களை நோக்கி நடந்தார்.

### துப்பாக்கிச் சூடு

அச்சமயத்தில் யாரும் கட்டளையிடாமலே—யாழ் பா. உ. யோகேஸ்வரன் சென்ற திசை நோக்கி பொலீசார் சுடத் தொடங்கினர். சுடும்படி யாரும் உத்தரவிடாமலே

படியானவர்களை வைத்துக் கொண்டு ஒரு பொலீஸ் ப்டையை நடத்த முடியுமா?

ஜே. ஆர், ஜெயவர்த்தன:— மிகவும் கஷ்டம்தான்!

அமிர்:— அப்படிப்பட்டவர்களை வெளியே அனுப்புங்கள். இது எப்படிப்பட்ட பொலீஸ் படை என்பது எமக்குத்தெரியவில்லை; குழப்பக்காரர்களின் படை இது!

டிமெல்: — முந்திய அரசிடமிருந்து இது எங்களுக்கு வந்து சேர்ந்திருக்கிறது.

அமிர்:— ஆனல் அப்படிப் பட்டவர்களை எதற்காக எம் மீது திணிக்கிறீர்கள்? யாழ்ப்பாணத்தில், அனுராதபுரத்தில், எங்கும் நாம் பொலீஸ்காரர்களால் தாக்கப்படுகிறேம்.

ஜே.ஆர். :- நாங்களும் அப்படிதாக்கப்பட்டவர்கள்தாம்!

அமிர்:— நீங்கள் ஒருகாலத்தில் அப்படி இருந்ததுஉண்மை; இப்போது அந்த நிலை உங்களுக்கு இல்லை—நாங்கள் நேற்றும் தாக்கப்பட்டோம்— இன்றும் தாக்கப்படுகிறேம்—நாளையும் தாக்கப்படுவோம் — நாம் எங்கள் விடுதலையை மீட்கும் மட்டும் இதேநிலையே நீடிக்கப் போகிறது.

### தீ மூண்டது எப்படி?

யாழ்ப்பாணம் பழைய சந்தை முற்ருக எரிக்கப்பட்டு விட்டது. அதற்குள் இருந்த கடைகள் அனைத்தும் சாம்ப

பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்; 30 பேர் துப்பாக்கிச் சூடுகளுடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப் பட்டனர்; சிலர் மிகவும் மோசமான காயம் அடைந்தனர்.

யாழ்ப்பாணதேசிய பேரவை உறுப்பினர் திரு. யோகேஸ்வரன் அவர்களின் வீட்டுக்குள் பொலீசார் மூன்று முறை பலவந்தமாக நுழைந்து வாயில் வந்தபடி தூஷண வார்த்தைகளால் அவரை ஏசி இருக்கின்றனர். அந்த வார்த்தைகளை இந்தப் பேரவையில் கூற நான் விரும்ப வில்லை.

பொலிசாரை கண்காணிப்பு வேலையிலிருந்து வாபஸ்பெற்று இராணுவத்தினரை அதிலே ஈடுபடுத்துமாறு பாதுகாப்பு துணை அமைச்சரிடமும், இராணுவத் தளபதியிடமும் கேட்டுக் கெண்டோம்- அதன்படி 16-8-77 இரவு இராணுவம் ரோந்து நடவடிக்கையிலீடுபட்டது. அதனுல் அன்று இரவு ஒருதொல்லையும் இருக்கவில்லை மீண்டும் நேற்று (17-8-77) பொலீசார் வந்தனர் - குழப்பங்களும் ஆரம்பமாகின.

### உதய சூரியன் கொடியை பிடுங்கினர்.

சிங்கள மாணவர்களும் கணிசமான அளவு பயிலும் யாழ்ப்பாண வளாகத்தில்சிறிது பதட்டநிலை நிலவுவதாகவும் வெளியார் உள்ளே வர முயல்வதாகவும் அங்கு அமைதியை நிலைநாட்டஎங்களில்யாரையாவது அங்கு வரும்படியும் வளாகப்

யை நிலைநாட்ட உடன் விரைந்தனர். ஆனுல் என்ன நடந்தது?

வளாகத்துக்கு அண்மையில் இவர்கள் சென்றபோது பொலீசார் இந்த எம். பிக்கள் சென்ற காரை நிறுத்தி — காரில் கட்டப்பட்டிருந்த உதய சூரியன் கொடியைப் பிடுங்கியெறிந்து — பின் ''டிக்கியை'' திறந்து அதற்குள்ளிருந்த பெற்ரேல் தகரத்தை எடுத்து தெருவில் வீசிவிட்டுத் திரும்பிப்போகும்படி மிரட்டியிருக்கிருர்கள். அவர்களால் வாய் திறக்கவே முடியவில்லை- அவர்களுக்கு வாய்ப்பே தரப்படவில்லை— இதனுல் அவர்கள் இடைநடுவிலே திரும்பவேண்டியிருந்தது.

இதையடுத்து உதவி பொலீஸ் மா அதிபருக்கு நான் தொலைபேசியில் பேசி – நடந்ததைச் சொல்லிய போது – தான் அவர்களுடன் தொடர்பு கொண்டு தன்னுல் முடிந்ததைச் செய்வதாக உதவி பொலீஸ் மா அதிபர் கூறினுர். ஆனுல் நாங்கள் உதவி பொலீஸ் மா அதிபருக்குப் புகார் செய்ததன் பயன் — தெருவில் காணப்பட்ட ஒவ்வொரு காரும் பொலீசாரினுல் மறிக்கப்பட்டு அதன் Wind Screen உடைத்து நொருக்கப்பட்டன. இதற்கு எங்களுக்கு ஆதாரபூர்வமான சாட்சியம் இருக்கிறது.

(3ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் படுகொலை நிறுத்தப்படாவிடின் படகில் ஈழம் வருவேன்! இலங்கை அரசு என்னை சுடட்டும்!

## டாக்டர் இரா சனுர்த்தனம் ஆவேச அறிக்கை!

**''இலங்கைத் தமிழர் படுகொலைக்கு முடிவு ஏற்படாதுபோனல் — இந்திய அரசு முறையான தலையீடு செய்ய மறுக்குமானுல்—நான் சென்னையிலிருந்து ராமேஸ்வரம் கால் நடையாக பயணம் மேற்கொண்டு படகில் இலங்கை நுழைவேன். சிங்கள வெறியர்களுக்கு கொலைவெறியடங்கவில்லையென்ருல்—என்னையும் என்னுடன் வருவோரையும் கொன்று மகிழட்டும்! 35 இலட்சம் தமிழருக்காக இதைத்தான் நான் செய்யும் நிலையில் உள்ளேன்.''**

—இவ்வாறு உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. சனுர்த்தனன் பத்திரிகைளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். திரு. சனுர்த்தனம் தமது அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது:

இலங்கைத் தமிழர் படுகொலையில் உலகத் தமிழர் எவ்வளவு கொதிப்படைந்துள்ளனர் என்பதை 26-8-77 லண்டனில் இலங்கை தூதரகம் தாக்கப்பட்டு, அதன் தொடர்பாக மூன்று தமிழ் இளைஞர்கள் கைதாகி ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளதிலிருந்தும், 27-8-77ல் 2000க்கும் மேற்பட்ட தமிழர்கள் லண்டனில் ஊர்வலமாகச் சென்று இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தியிருப்பதின் மூலமும் அறியலாம்.

இலங்கைத்தமிழர் படுகொலை இப்போது புதிதாக நடந்துவிடவில்லை. சரித்திர காலத்திலிருந்து, ஆங்கில ஆட்சிக்காலத்திலும், சிங்களவர்களின் அனைத்துக்கட்சி ஆட்சிக் காலத்திலேயும், தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இப்போது அமைதி ஏற்பட்டாலும் அது முடிவாகப் போவதில்லை. இப்பிரச்சினைக்கு ஒரே வழி — இலங்கைத் தமிழருக்குத் தனி நாடுதான்—அந்த உண்மையை இந்திய அரசு உலகுக்கு உணர்த்தவேண்டும். தமிழர்களது தனிநாட்டுக் கோரிக்கையை இந்திய அரசு அங்கீகரிக்கவேண்டும்.

உலகத்தின், பல நாடுகளின் சிறுபான்மையினர் பிரச்சினையில் தலையிடும் இந்தியா, இலங்கைச் சிறுபான்மையினர் பிரச்சினையை மனிதாபிமான அடிப்படையில் ஐ. நா. விற்கு எடுத்துச்சொல்ல முன்வர வேண்டும்.

இலங்கை வாழ் இந்தியருக்கு,

இன்னமும் பாதுகாப்பற்று, இலங்கை அரசு உதவும் என்று நம்பி ஏமாற வேண்டாம். உங்களுக்கு உதவ அனுப்பப் படும், போலீசும் இராணுவமுமே உங்கள் பொருள்களைக் கொள்ளை அடிக்க, பெண்களைக் கற்பழிக்க, இனியும் மலையகங்களில் சிங்களவர் மத்தியில் உயிரைக் கையில் பிடித்து அஞ்சிக் கொண்டிருப்பதை விட, தமிழ்ப்பகுதிகளுக்கு கால்நடையிலேனும் உடனே மாறுங்கள்.

இந்தியாத் தமிழன், இலங்கைத் தமிழன் என்ற வேற்றுமை மறைந்துவிட்டது. உங்களை ஏற்க இலங்கையின் பூர்வீகத் தமிழர்கள் தயாராக இருக்கிருர்கள்.

ஈழத் தமிழர் தலைவர்களே,

இலங்கைத் தமிழர் படுகொலை எண்ணிப்பார்க்க முடியாத ஒன்று. இந்தியாவிற்கு இலங்கைக்கு வரும் கடல் தடையாக இல்லாது இருந்திருக்குமானுல், தமிழ் அகதிகள் தமிழ் நாட்டில் நுழைந்திருப்பார்கள். அப்போது தமிழ்நாட்டுத் தமிழர்களும் இந்திய அரசும் உண்மையைப் புரிந்திருக்கும் – 'பங்களாதேஷ்' கலவரத்தின்போது கல்கத்தாவின் தெருக்களில் பங்களா தேஷ் அகதிகள் நுழைந்தபோது தான் நிலைமையை உலகம் புரிந்தது. ஆனுல் இலங்கைத் தமிழர்கள் ஒன்று சிங்கள வெறியரிடம் சாக வேண்டும். அல்லது கடலில் விழவேண்டிய பரிதாபகரமான நிலையில் உள்ளனர். உங்கள் தனிநாட்டுக் கோரிக்கை ஒன்றே தமிழரைக் காப்பாற்றும். அது ஒன்றே ஈழத் தமிழர் வாழ வழி வகுக்கும் உங்கள் அறப்போரில், காந்திய வழியில் அண்ணு நெறியில் உலகத் தமிழர்களில் உணர்வுள்ளவர்கள் என்றும் உங்கள் பக்கம் இருப்பார்கள்.

''இலங்கைத் தமிழர் படுகொலைக்கு முடிவு ஏற்படாது போனுல், இந்திய அரசு முறையான தலையீடு செய்யத் தவறுமானுல், நான் சென்னையிலிருந்து ராஸேஸ்வரம் வரை கால் நடையாக பயணம் மேற்கொண்டு படகில் இலங்கை நுழைவேன். சிங்களவெறியர்களுக்கு, கொலைவெறி அடங்கவில்லை என்ருல் என்னையும் என்னுடன் வருவோரையும் கொன்றுமகிழட்டும். 35 இலட்சம் இலங்கைத் தமிழருக்கு இதைத்தான் நான் செய்யும் நிலையில் உள்ளேன்.

# "தமிழ் மக்களுக்கு....

(2ம் பக்கத் தொடர்ச்சி)

### நகைக்கடை கொள்ளை

மேற்குறிப்பிட்ட மூன்று பா.உ. க்கள் சென்றகாரையும் பொலீசார் எந்த இடத்தில் மறித்து திருப்பி அனுப்பினுர்களோ அதே இடத்தில்— இ. போ. ச. பேருந்து வண்டியொன்றை பொலீசார் பொறுப்பெடுத்து — அதை நகைக்கடைகள் இருக்கின்ற பகுதிக்கு ஓட்டிச்சென்று—ஒரு நகைக்கடைக்குள் நுழைந்து அக்கடைக்குள்ளிருந்த நகைகளை அள்ளிக்கட்டி தாம் ஓட்டி வந்த பேருந்து வண்டிக்குள் ஏற்றியிருக்கிருர்கள். இது நடைபெறும்போது, அந்தவழியேவந்த வட்டுக்கோட்டை பா. உ. திருநாவுக்கரசும், கிளிநொச்சி பா. உ. ஆனந்தசங்கரியும், இதைத்தமது கண்களால் நேரடியாகப் பார்த்திருக்கிருர்கள். இதுபற்றிய உண்மையைக் கூற யாழ்ப்பாணத்திலுள்ள இ. போ. ச. டிப்போ சுப்ரீன்டென்டனையும் குறித்த இ. போ. ச. பஸ் சாரதியையும் நேற்று இரவு கலாசார அமைச்சர் முன்னிலையில் அழைத்திருந்தோம். இவையத்தனையையும் சீருடை அணிந்த பொலீசாரே நடத்தி முடித்திருக்கிருர்கள்,

தர்மலிங்கம்:- ஆனுல் அவர்களுக்கு இலக்கங்கள் கிடையாது!

அமிர்:— அவர்களுக்கு இலக்கங்கள் காணப்படவில்லை! இதை நான் உதவி பொலீஸ்மா அதிபரின் கவனத்துக்கு கொண்டுவந்த போது—அவர் ''இது நடக்க முடியாத விஷயம்'' என்று கூறி அதை அப்படியே நிராகரித்து விட்டார். இதை உங்களால் கற்பனைபண்ணிப் பார்க்க முடிகிறதா? எல்லா பொலீஸ் அதிகாரிகளும் சீருடை அணிந்த தேவதைகள் என்றும், இப்படியான செயல்களில் அவர்கள் ஈடுபடமாட்டார்கள் என்றும் உதவி பொலீஸ்மா அதிபர் கருதுவதாகத்தெரிகிறது! ஆனுல் இச் சபையின் பொறுப்பு வாய்ந்த இரண்டுஉறுப்பினர்கள் பொலீசாரின் மேற்குறிப்பிட்ட சம்பவத்தை தமதுகண்களால் நேரடியாகப் பார்த்திருக்கிருர்கள்: அவர்களது கார் திருப்பிவிடப்பட்டதற்கு காரணம்—நகைக்கடை நிகழ்ச்சியை இந்த மூன்று பா. உ. க்களும் கண்டுவிட்டார்கள் என்பதுதான். அந்த இடத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டிருக்கிருர். அவரைச்சுட்டது யார் என்பது எங்களுக்குத் தெரியும் – அங்கு கொள்ளையடித்த பொலீசாரே குறித்த நபரையும் சுட்டுக் கொன்றிருக்கின்றனர்.

### இடமாற்றம் செய்க

பொலீஸ் உயர் அதிகாரிகள் இப்போது தமது ஆட்கள் செய்த பாவங்களை — கொடுமைகளையெல்லாம் மூடி மறைக்க முயற்சிக்கிருர்கள். இதனுல்தான் நான் பாதுகாப்பு அமைச்சு செயலர்ளரிடமும், இன்று காலை பிரதமரைச் சந்தித்தபோதும் தனது கடமையிலிருந்துதவறிய யாழ் பொலீஸ்அதிபர் திரு. செனிவிரத்திணுவை உடனடியாக அங்கிருந்து மாற்ற வேண்டுமென்றும்—உதவிபொலீஸ் அதிபருக்கும், பொலீஸ் நிலையபொறுப்பு அதிகாரிக்கும், அங்கு மேலும் ஒரு நிமிடம்கூட கடமையாற்ற தகுதியில்லையென்றும் எடுத்துக் காட்டினேன். இதை நீங்கள் செய்யாவிடின் —யாழ்ப்பாணத்திலுள்ள மக்களின் நம்பிக்கையை நீங்கள் பெறவே முடியாது, அங்கு மக்கள் பீதியின் நடுவில் வாழ்கிருர்கள்! பிரதமர் நீட்டுகின்ற நேசக்கரத்தை பிடித்துக் கொள்ளுமாறு அரசாங்க உறுப்பினர்கள் பலர் இங்கு பேசினுர்கள்; ஆனுல் பிரதமரது இந்த நட்புக்கரம் யாழ்ப்பாணத்துக்கு எட்டக் கூடிய வரையில் நீட்டப்படவில்லை. அங்கு நீட்டப்படும் கரங்கள் பொலீஸ்கா்ரர்களின் முஷ்டிக் கரங்களும் எங்களை சுடுவதற்காக இயந்திரத்துப்பாக்கிகளை ஏந்திய கரங்களுமாகவே இருக்கின்றன,

### இதுதான் நட்புக்கரமா?

தம்மீது நம்பிக்கை வைக்கும்படி பிரதமரும், அமைச்சரவையும் தமிழ் மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் அந்தரங்க சுத்தி நிறைந்ததாக இருக்குமானுல் — அதை நிரூபித்துக் காட்டுவதற்கு இது நல்லதோர் சந்தர்ப்பம், கடமைதவறிய இந்த பொலீஸ் அதிகாரிகளை அங்கிருந்து உடனடியாக இடமாற்றம் செய்து, நடைபெற்ற சம்பவங்களை விசாரிப்பதற்கு ஓர் பாரபட்சமற்ற-உயர்நீதிமன்ற நீதியரசர் ஒருவரைக் கொண்ட ஆணைக் குழுவை நியமிக்கவேண்டும்.

நான் ஆரம்பத்தில் கூறியது போல் — பொலீசார் தமது தவறுகளை மூடி மறைத்திட —இது எங்களது — தமிழர் விடுதலைக் கூட்டணியினது போராட்டத்தில் ஓர் பகுதி என்று கூறத் தலைப்பட்டிருக்கிருர்கள். நான் இச்சபைக்கும் — முழு நாட்டுக்கும் — கூறி வைக்க விரும்புவது இதுதான். —நாங்கள் எங்கள் போராட்டத்தை ஆரம்பிக்கும்போது அது பற்றி போதிய முன்னறிவித்தல் தந்து விட்டே எமது போராட்டத்தை ஆரம்பிப்போம்; எங்கள் சொந்த சந்தைக்கட்டடத்துக்கும், எங்கள் சொத்துக்களுக்கும் தீயிடுவதும்—எங்கள் சொந்த மக்களை கொன்று குவிப்பதும் எங்கள் போராட்டமாக இருக்காது

# வட அயர்லாந்தாக, சைப்பிரஸாக இலங்கை மாறும் ஆபத்து!

## பீட்டர் கெனமன் கூறுகிருர்!

''இனரீதியிலான வன்முறை ஒருதடவை தலையெடுக்க அனுமதிக்கப்படுமானுல் —அதன் பின்னர் சகஜநிலை மீண்டும் திரும்பும் என்று எவெரும் எதிர்பார்க்க முடியாது. இனரீதியிலான வன்முறை தலைதூக்குவதற்கு அடிப்படைக் காரணம் என்னவென்பதைக் கண்டறிந்து அதை நிவர்த்திப்பதற்கு துணிகரமான நடவடிக்கையெடுப்பதன் மூலமே மீண்டும் சகஜ நிலையை தோற்றுவிக்க முடியும். வட அயர்லாந்திலும் சைப்பிரஸிலும் காணப்பட்ட அதே நிலையே இங்கு 'சகஜ நிலை' ஆகிவிடுமோ என்று அஞ்சத் தோன்றுகின்றது.''

''சர்வகட்சி மாநாட்டைக் கூட்டப்போவதாக அரசாங்கம் சொல்லிக்கொண்டிருந்தால் மட்டும் போதாது; அத்தகைய மாநாட்டைக் கூட்டுவதற்கு முன்பு, இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தனது திட்டவட்டமான ஆலோசனைகள் எவையென்பதை அரசு பகிரங்கப்படுத்த வேண்டும். அப்போது தான் மற்றக் கட்சிகளும் நாட்டு மக்களும் அவற்றை ஆலோசிக்க முடியும்.''

''இடதுசாரி ஐக்கிய முன்னணியொன்றுதான் இந்தப் பிரச்சினையில் திட்டவட்டமான ஆலோசனைகளை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தது. அந்த ஆலோசனைகளே பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு கடைசி நம்பிக்கையையூட்டுவதாக அமைந்திருந்தது.''

மேற்கண்டவாறு கம்யூனிஸ்ட் கட்சிச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் விடுத்த அறிக்கையொன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.



சிங்கள இனவெறியர்களின் பயங்கரக் கைகளுக்கு சிக்காமல் தம்புள்ளைக் காட்டுக்குள் மறைந்துநின்று எப்படியோ தப்பி—தாய்தந்தையர் எங்கேயென்று தெரியாமல்—தன் உடன் பிறந்த அண்ணனையும் சிங்கள இனவெறியரிடம் ஒப்படைத்துவிட்டு அகதிக்கோலத்தில் தமிழ் ஈழம் நோக்கி ஓடிவந்திருக்கும் ஆறே ஆறுமாத வயதுடைய ஆண் குழந்தை செல்வஜோதியையும் அக் குழந்தையின் 11 வயது அக்காள் மனோரஞ்சிதத்தையும் படத்தில் காணலாம். இவர்கள் இப்போது கொழும்புத்துறை வயோதிப ஆச்சிரமத்தில் இருக்கின்றனர்.

# கல்முனையிலும் பொலீஸ் இராணுவம் காடைத்தனம்

## கூட்டணி அலுவலகம் உடைக்கப்பட்டது!

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கல்முனைத் தொகுதிக் கிளை அலுவலகம் அடித்து நொறுக்கப்பட்டுள்ளது. வெறி பிடித்த காக்கிச்சட்டைக் காடையர்களே இதைச் செய்திருக்க வேண்டுமென அங்குள்ள மக்கள் சந்தேகப் படுகிறார்கள். கல்முனைப் பொலீசாரும் இராணுவத்தினரும் வீதியில் போவோர் வருவோரையெல்லாம் தாக்கி வருவதுடன், கூட்டணி ஆதரவாளர்களை தேடித்தேடி தாக்குகிறார்களாம். தமிழர் விடுதலைக் கூட்டணி பிரமுகர்களில் ஒருவரான நொத்தாரிஸ் பி. வி. கந்தையாவின் வீடு—அண்மையில் பொலீசாரால் சோதனையிடப்பட்டது. நான்கு ஜீப்புக்களில் துப்பாக்கி ஏந்திய பொலீசார் படையெடுத்துச் சென்றே இந்தச் சோதனையை நடத்தியுள்ளனர்; கல்முனை த. வி. கூ. செயலாளர் கலைக்கொழுந்தனும் பொலீசாரால் தாக்கப்பட்டுள்ளார்.

இராணுவத்தினர் தமிழ் மக்களின் வீடுகளில் அர்த்த இராத்திரியில் நிம்மதியாகத் தூங்கும் வேளையில் புகுந்து காடைத்தனங்கள்புரிய முயல்கின்றனர்.

வீட்டினுள் புகும் இராணுவத்தினர் பெண்களை வெளியில் அழைத்து ''தண்ணீர் தாகமாக இருக்கின்றது தண்ணீர் தா'' என்றுகூறி வம்புபண்ண முயல்கின்றனர்.

பெண்களின் மலசல கூடங்களினுள் பதுங்கிப் பதுங்கி திரிகின்றனர். இதனால் பெண்கள் வெளியில் செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது வீட்டின் தலைவர்களை இராணுவத்தினர் ''டேய் நாங்க நாளைக்கு இரவைக்கு வரும்போது நீங்கள் வீட்டில் இருக்கக்கூடாது'' என்று எச்சரிக்கின்றனர்.

வீதியால் செல்லும் இளைஞர்களைக் கூப்பிட்டு அவர்களைத் துன்புறுத்தும்போது ''பறத் தெமிழா உனக்குத் தமிழ் நாடா வேணும். எங்களுக்கு நல்ல பெட்டைகள் தாங்க தமிழ்நாடு தாறம்'' என்று கூறித் தாக்குகின்றனர்.

இராணுவத்தினரின் காதில் எட்டும்படி தமிழ் கதைத்தால் துவக்குப் பிடியினால் அடித்து நொறுக்குகின்றனர்.

ஏழை மீனவர்களும் சிறு குடியானவர்களும் வசிக்கும் கடற்கரைப்பகுதிகளில் இவ் இராணுவத்தினரினதும் பொலீசாரினதும் அட்டூழியம் நடைபெறுகின்றது. அவர்கள் திடீர் என்று வளவினுள் நுழைந்து அங்குள்ள பெண்களிடம் ''ஏய் மரத்தில் ஏறி இளநீர் ஆய்ந்துதா? என்று கூறி வம்பு பண்ணுகின்றனர்.

## குர்பாச்சான்சிங் அறிக்கை

# இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்!

அண்மையில் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இடம்பெற்ற சிங்களவர் கொடுமையால் ஏற்பட்ட பாதிப்புக்கள் குறித்த தமது அறிக்கையை இந்தியப் பிரதமர் மொரார்ஜி தேசாயிடம் புதுடெல்லியில் வைத்து இந்திய தூதர் குர்பாச்சான் சிங் நேரில் கையளித்திருப்பதாக இந்திய வானொலிச் செய்தியில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள தமிழர்களதும் குறிப்பாக இந்திய பிரஜைகளதும் உயிருக்கும், உடமைகளுக்கும் பாதுகாப்பளிக்கும்படி இலங்கைப் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்தனவைக் கேட்டுக்கொண்ட இந்திய அரசாங்கம் இங்கு ஏற்பட்ட கலவரங்களால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு விஜயம் செய்து உண்மை நிலையை அறிவிக்கும்படி கொழும்பிலுள்ள இந்திய தூதரைப் பணித்திருந்ததும் தெரிந்ததே. மேற்படி இந்திய அரசின் பணிப்புக்கு அமைந்தே இலங்கையிலுள்ள இந்திய தூதர் சம்பந்தப்பட்ட அறிக்கையை பாரதப் பிரதமரிடம் கையளித்துள்ளார்.

இந்திய தூதர் கையளித்திருக்கும் இனக்கலவர நிலைமைகள் பற்றிய அறிக்கை இந்திய பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென அறியப் படுகிறது. யதார்த்த நிலைக்கும் தூதரது அறிக்கையில் தரப்பட்டுள்ள விவரங்களுக்கும் இடைப்படும் வேறுபாடுகளைத் தெளிவுபடுத்தும் பொருட்டு தூதர் அறிக்கை லோக்சபையில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்று தமிழக பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சி வேறுபாடு கடந்த நிலையில் ஏகோபித்துக் குரல் கொடுக்கக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் தமிழர்களுக்கு நிகழ்ந்த இன்னல்கள் குறித்து இந்திய யூனியன் அரசு விசாரிக்க வேண்டுமென்றும் தலையிடவேண்டுமென்றும் தமிழக, பாண்டிச்சேரி அரசுகள் தீர்மானங்களை நிறைவேற்றி மத்திய யூனியன் அரசுக்குஅனுப்பியிருந்தனவென்பது தெரிந்ததே! லோக்சபையில் பாரதத் தூதுவரின் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து தமிழக, பாண்டிச்சேரி சட்டசபைகளில் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்படலாம்.

### சிங்களவருக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தொழிலாளருக்கும் மேற்படி வட்டியில்லாத கடன் வழங்கப்பட்டிருப்பதுடன் — உடனடியாக அவர்கள் காலி, புத்தளம் ஆகிய இடங்களிலுள்ள சீமெந்து தொழிற்சாலைகளுக்கு மாற்றப்பட்டு — அங்கு வேலை வழங்கப்பட்டும் விட்டது.

(3) யாழ் உணவுக்கட்டுப் பாட்டுத்திணைக்களத்தில்வேலை செய்து வந்த இரு சிங்கள லிகிதர்களுக்கு உடனடியாகத் தென்னிலங்கைக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் பாதிப்புக்குள்ளான 5000 க்கு மேற்பட்ட தமிழ் ஊழியர்களின் பிரச்சினை குறித்து இன்னும் ஒரு தீர்வும் இல்லை—

இதற்குக் காரணம் என்ன? நாலு பேர் ஆனாலும் சிங்களவர் பிரச்சினைகள் உடனடியாக கவனிக்கப்படுகிறது என்றால் -ஆளுபவன் சிங்கள இனத்தினன் — ஆளப்படும் அடிமை தமிழன்!

பாதிக்கப்படாத சிங்களவருக்கு உடனடியாகப் பரிகாரம்—பாதிக்கப்பட்ட தமிழர்கள் நடுவீதியில்! இதுதான் தமிழன் நிலை!

### பொத்துவிலில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்கைகளுக்கு ஆதரவு கிடையாது என்ற பிரசாரம் திரு. கனகரத்தினத்தின் வெற்றிமூலம் பொய்யாக்கப் பட்டுவிட்டது. 35 இலட்சம் ஈழத் தமிழர்களும் இதற்காகப் பொத்துவில் தொகுதி தமிழ் மக்களுக்கு தமது வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்ளுகிறார்கள்.

இப் பத்திரிகை, சிலோன் நியூஸ் பேப்பேர்ஸ் லிமிட்டெட் நிறுவனத்தாரால் 1977 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 14 ம் திகதி புதன் கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சுப்பதிவு—வஸ்தியன் அச்சகம், யாழ்ப் பாணம்

## டாக்டர் ஜனார்த்தனன் வேண்டுகோள்!

தமிழ் மக்கள் தொல்லைப்படுவது துன்பமடைவது உலகில் புதிதான நிகழ்வு அல்ல. உலகின் நாடுகளில் வாழும் தமிழர்கள் பாதுகாப்புக் குறைவாக இருப்பதற்குரிய அடிப்படைக் காரணம், தமது தொழில் காரணமாக, பல்வேறு சமூகங்களிடையே வாழ்வதாகும்.

தமிழர்கள் பாதுகாப்பான இடங்களில் வாழ வேண்டும். தமிழ்க் குழந்தைகட்குத் தமிழ் பண்பாட்டையும் வாழ்வு முறையையும் தரும் சூழல் அவர்கட்குத் தேவை.

**இலங்கையில் உள்ள தமிழ் அகதிகட்கு அன்பான பணிவான வேண்டுகோள்**

இலங்கைத் தீவின் தமிழ் நிலப் பகுதிகளில் குடியேறிப் பாதுகாப்புடனும், பண்பாக பேணப்படும் சூழலிலும் வாழ்வை, மறுவாழ்வை, புதுவாழ்வை, பாதுகாப்பான வாழ்வைத் தேடிக்கொள்ளுங்கள்.

பழைய இடங்களுக்குச் சென்றால், மீண்டும் உங்கள் வாழ்வு பாதுகாப்பு அற்றதாகப் பண்பாட்டுச் சூழல் அற்றதாக, வன்முறைக்கும் பலாத்காரத்துக்கும் அடிகோலுவதாக அதனால், தமிழ் இரத்தம் அநியாயமாகச் சிந்தப்பட வழிகோலும். தமிழர்கள் உயிரிழக்க நேரிடும்.

உங்கள் நிலப்பகுதி இலங்கையின் வடக்குக் கிழக்கு மாகாணங்களே!

உங்கள் வாழ்வு சிறக்கும், முகிழ்க்கும் இடங்கள் அங்கே தான் —

உங்கள் இரத்தம் உங்களுடையதாக இருப்பதும் அங்கே தான் — அங்கே செல்க —

டாக்டர் இரா. ஜனார்த்தனன்
தலைவர், உலகத் தமிழர் பேரவை

சென்னை 25-8-77.

''நீம் வாசனை சோப்''

சுத்தமான வேப்பெண்ணெய்
கலந்து தயாரிக்கப்பட்ட
நீம் வாசனை சோப்பை
வாங்கி உபயோகியுங்கள்.
உங்கள் சருமத்தின் பாதுகாப்பிற்கு சிறந்தது

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org